(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 110.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2011, யூலை 22, வெள்ளிக்கிழமை, பி. ப. 1.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0562/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் ஒப்பந்தக்காரர்களின் பெயர்களையும்,

(ii) கேள்வி பத்திர செயன்முறை மூலமாகவா மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதையும்,

(iii) அவ்வாறாயின், கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்களையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமானது எப்போது ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் என்பதையும்,

(ii) அதற்கு எவ்வாறு நிதியிடப்படும் என்பதையும்,

(iii) வட்டி மற்றும் நிர்மாணச் செலவு ஆகியவற்றினடிப்படையில் மொத்தச் செலவினையும்,

(iv) அடுத்த 6 வருடங்களுக்கான காசுப்பாய்ச்சல் எதிர்வு கூறலையும்,

(v) மூலதனச் செலவு மற்றும் வட்டிச் செலவு, ஏனைய இயக்குச் செலவுகள் மற்றும் அடுத்த 10 வருடங்களுள் பெறப்படவுள்ள வருமானம் ஆகியவை உள்ளிட்ட காசுப்பாய்ச்சல் கூற்றினை வருட அடிப்படையிலும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்ட நிர்மாணச் செலவுகளுக்க எடுத்த கடனை மீளச் செலுத்த கொழும்புத் துறைமுகத்தின் வருமானம் பயன்படுத்தப்படுமா என்பதையும்,

(ii) கடனை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டிய திகதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0958/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004.06.04 ஆம் திகதிய 1344 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் அனுராதபுரம் இராசதானியில், 400 யார் ஒழுங்குவிதியின் கீழ் எந்தவொரு நிர்மாணத்தையும் மேற்கொள்ளக் கூடாதென சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளபோதும் அதற்கு முரணான வகையில் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், அந்த நிர்மாணங்கள் யாவை என்பதையும்,

(ii) அதற்காக தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அவ்வாறானதோர் அனுமதியை வழங்கிய அலுவலரின் பெயர் மற்றும் பதவி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் புனித நகரின் உள் நீர் அகழியை கொங்கிறீட் இட்டு செப்பனிடும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொல்பொருளியல் திணைக்களமா இல்லாவிடின் தொல்பொருளியல் திணைக்களத்திலிருந்து அனுமதி பெற்றுள்ள வேறொரு தரப்பினரா என்பதையும்,

(iii) வேறொரு தரப்பினராயின் அவர்கள் யாவர் என்பதையும்,

(iv) மேற்படி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் நோக்கம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) தேசிய மரபுரிமை நகரமான அனுராதபுரம் புனித நகரில் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1149/ '11

3.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றை பதிவு செய்வதற்காக அரசாங்கம் அறவிட்ட கட்டணத்தை வருடவாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகின்ற வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்,

(ii) அவை சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வாறான நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1201/ '11

4\.
கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2004 ஆம் ஆண்டு சுனாமி(ஆழிப்பேரலை) அனர்த்தத்தின்போது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு 460 வீடுகள் இன்னும் தேவைப்படுகிறதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) ஏறத்தாழ ஏழு வருடங்களாகத் தொடர்ந்தும் இடம்பெயர் முகாம்களில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்வதற்கென மேற்கொள்ளப் படவிருக்கும் நடவடிக்கை பற்றியும்;

(ii) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீடமைப்புத்தேவைகள் பூர்த்திசெய்யப் படுவதற்கான ஏதாவது காலக்கெடுவையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1226/ '11

5\.
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1347/ '11

6\.
கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை ஆசிரிய சேவைக்குரிய, தற்போது நாட்டினுள் சேவையாற்றும் உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஆசிரியர்களில், மாகாண அரச சேவையிலும் மத்திய அரசின் கீழும் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) முழுக் கல்வி கட்டமைப்புக்கும் தேவையான உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது கல்வித் துறையிலுள்ள உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், உடற் கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0853/ '10

7\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது சில கிரிக்கெட் வீரர்களது நடத்தைகளை ஆதாரமற்ற முறையில் கடந்த காலத்திலும் தற்போதும் தாக்குவதற்கான காரணங்கள் என்னவென்பதையும்;

(ii) அக் கிரிக்கெட் வீரர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஆட்ட நிர்ணயம் தொடர்பில் யாராவது இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கெதிராக சர்வதேச கிரிக்கெட் சபை முறைப்பாடுகள் எதனையும் மேற்கொண்டதா என்பதையும்;

(ii) ஆட்ட நிர்ணயம் தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கும் சர்வதேச கிரிக்கெட் வீரர்களது பெயர்கள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) எமது கிரிக்கெட் வீரர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கமும், "இலங்கை கிரிக்கெட்" சபையும் செயல்வேகத்துடன் தீவிரமாகவும் செயற்படாமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(ii) எமது கிரிக்கெட் வீரர்களைப் பாதுகாப்பதற்கு எதிர்காலத்தில் எவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும்;

(iii) எமது கிரிக்கெட் வீரர்களது நற்பெயருக்கு குந்தகம் விளைவிப்பதில் ஈடுபட்டுள்ள பொறுப்பு வாய்ந்த சில வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிராக குற்றவியல் அவதூறு சட்ட நடவடிக்கைள் ஏன் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1014/ '10

8\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக இலங்கையின் புகழுருவை உலகில் பிரச்சாரம் செய்வதற்காக குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அப்பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதன் பிரகாரம் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்காக கேள்விப்பத்திரங்களை முன்வைத்த பிரச்சார நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அந்த நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்களில் "பெல்பொடெஞ்சர்" எனும் பிரித்தானிய கம்பனியொன்று மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரச்சாரத்திற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள சேவைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகையும் ஒவ்வொரு பணிக்காக செலுத்தப்பட்ட பணத்தொகைகளும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1202/ '11

9.

கௌரவ எம்.ரி. ஹஸன் அலி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் நியமனம் செய்யப்படும் நிரந்தர தயாரிப்பாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் தகைமையையும்;

(ii) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் தற்போது கடமையாற்றும் நிரந்தர தயாரிப்பாளர்களின் எண்ணிக்கையையும்;

(iii) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் தற்போது கடமையாற்றும் அத்தகைய நிரந்தர தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் தகைமைகளை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1227/ '11

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக விளையாட்டுத்துறை அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1349/ '11

11.

கௌரவ சாந்த பண்டார,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களின் சேவையின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தி கிடைப்பதென்பதையும்;

(iii) சில பிரதேசங்களில் சேவைக்காக மேற்படி உத்தியோகத்தர்கள் இல்லாதிருப்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது காணப்படும் மேற்படி உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையை நிரப்புவதற்கு எடுக்கப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1424/ '11

12\.

கௌரவ அஜித் குமார,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசன திணைக்களத்துக்கு சொந்தமான குளங்களை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நபர்களுக்கு அன்றேல் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடுவதற்கு அல்லது வேறு வகையில் ஒப்படைப்பதற்கு ஏற்பாடுகளேதேனும் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய குளங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இக் குளங்களை குத்தகைக்கு விடுவதற்கு அல்லது வேறேதேனும் முறையில் ஒப்படைப்பதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) இதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைகள் யாவையென்பதையும்;

(iii) குளங்களை குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கு முன்வந்துள்ள ஆட்கள், கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஆட்களுக்கு, கம்பனிகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்படவுள்ள குளங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி ஆட்கள், கம்பனிகள் அல்லது நிறுவனங்களுக்கும் நீர்ப்பாசன திணைக்களம் அல்லது அரசாங்கத்துக்கும் இடையிலான உடன்படிக்கைகள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0989/ '10

13\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் இலங்கை அரசாங்கத்திற்காக வெளிநாடுகளில் பணியாற்றுவதற்காக பொது உறவுகள் கம்பனிகளுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஒப்பந்தம் செய்து அல்லது அவற்றை அமர்த்தியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) அவற்றுடன் எப்போது ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) அவை விலைமனு கோரல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனவா என்பதையும்;

(v) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்பட்டது என்பதையும்;

(vi) இக்கம்பனிகளுக்கு மாதமொன்றுக்கு செலுத்தப்படும் தொகையை இலங்கை ரூபாவிலும்;

(vii) அவற்றின் சேவையால் கிடைக்கப்பெற்ற நன்மை என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டில் பணிபுரிவதற்காக மேலும் பொது உறவுகள் கம்பனிகள் பணிக்கு அமர்த்தப்படுமா என்பதையும்;

(ii) இலங்கைக்காக பணியாற்றும் அமெரிக்காவில் உள்ள குர்விஸ், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பெல்பொடெஞ்சர், இந்தியாவில் உள்ள லெக்சிகன் ஆகிய நிறுவனங்களினால் ஆற்றப்படும் பணிகள் யாவை என்பதையும்;

(iii) இந்தக் கம்பனிகளின் உரிமையாளர்களையும்;

(iv) வெளிநாட்டுக் கொள்கை வகுப்பதிலும் அந்தக் கம்பனிகள் ஈடுபட முயற்சிக்கின்றனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்கண்டவாறு வெளி நிறுவனங்களுக்கு அவர்களின் கடமைகளில் ஒன்றை ஒதுக்கிக் கொடுப்பதன் நிமித்தமாக அமைச்சு பணியாட்கள் ஊக்கம் குன்றிப்போவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1015/ '10

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டுக்காக நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் கீழ் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இந்தப் பணத் தொகையில் கிராமிய வீடுகள், அரசாங்க வீடுகள், மாடிவீடுகள் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வீடமைப்புத்திட்டங்களுக்கு பலதரப்பட்ட நாடுகளிலிருந்து கடன் அல்லது நிதி உதவிகள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் கடன் அல்லது நிதி உதவிகளை வழங்கிய நாடுகள் மற்றும் வழங்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1228/ '11

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணைகள்

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கமல் ஜயக்கொடி

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹரல்ட் ஹேரத்

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1964 ஒற்றோபர் 1 ஆம் திகதிய 14186 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் (v) ஆம் பகுதியை திருத்தஞ் செய்து அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூன் மாதம் 30 ஆம் திகதிய 1712/21 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 4.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

16.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.